ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்ய சந்த்ரிகை.

தொகுதி 16 Vol. 16	ஜய ஆனி June 1954.	பகுதி 6 No. 6

		பக்கம்
ஆரோக்யாம்ருதம்	...	3
நயனரோக சிகித்ஸா தீபம்	...	4
நவீன வைத்யமுறை	...	,,
ஆயுர்வேத கல்வித்திட்ட சீரமைப்பு	...	5
பாலசிகித்ஸா—ஆரோக்ய கல்பத்ருமம்	...	11
ஔஷதகுணம்—2		
சந்த்ரப்ரபாவடீ	...	15
சிலாஜதுவடீ	...	17
அரசாங்கத்தின் மழுப்பல்	...	19
ஆரோக்யாம்ருதம்—1		
சுகவாழ்வு—(தனி)		1-4

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

மண்டல சம்பந்தமான எல்லாவித காரியங்களுக்கும் தலைவருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

தலைவர் T. V. ராதாகிருஷ்ண சாஸ்த்ரி M. A., L. I. M.
23. சிங்காரிநாயக்கன் தெரு, மந்தை வெளி, மைலாப்பூர்
மதராஸ்.—4.

சந்தா அனுப்பவும், மற்ற நிர்வாஹ விஷயங்களுக்கும் விலாஸம்:
பொதுக் கார்யதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்:
27, சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சினுப்பள்ளி.

பண்டிட் ஸ்ரீ. S. M. ஸௌந்தரராஜாசார்யர்,
ஆசிரியர்—"வைத்ய சந்த்ரிகா" ஸ்ரீரங்கம்.

என்ற விலாஸத்திற்கு பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய ஸகல விஷயங்களையும் பற்றி எழுத வேண்டும்.

आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

ஆரோக்யாம்ருதம்

சென்ற இதழில் தெரிவித்திருந்தபடியே அப்யுதயகேந்த்ர வெளியீடான "ஆரோக்யாம்ருதம்—1" இப்போது தலைவர் ஸ்ரீ ராதாக்ருஷ்ண சாஸ்த்ரிகளால் ஆரம்பிக்கப் பெற்று வெளிவந்திருக்கிறது. இவ்விதழின் தொடர் பொதுஜனங்களுக்கு பரமோபகாரமளிக்கக் கூடியதாயிருக்கும். இவ்விதழைப் பொதுஜனங்களிடையே மிகவும் அதிகமாகப் பரப்பவேண்டியது நம் வைத்ய ஸகோதரர்களின் இன்றியமையாத கடமையாகும். ஒவ்வொரு வெளியீட்டிலும் தம் தம் கேந்திரங்களில் செலவு செய்யக் கூடிய காபிகளின் தொகைகளை காரியதரிசிக்குத் தெரிவித்தால் வேண்டிய காபிகளை அவர் அனுப்புவார். இதுபற்றிய மற்றவிஷயங்களுக்கும் கார்யதர்சியுடன் தொடர்பு வைத்துக் கொள்ளலாம்.

வைத்யவித்வான்கள் பொதுஜனங்களுக்கு உபயோகமாகக் கூடிய விஷயங்களை அதிக விரிவில்லாமல் நான்கு பக்கங்களில் அடங்கக் கூடியதாக அடிக்கடி எழுதிஅனுப்பும்படி வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

பத்திரிகையின் அபிவிருத்தி விஷயத்திலும் அன்பர்களின் ஆலோசனையும் வரவேற்கப்படுகிறது.

மதிப்புரை:

நயனரோக சிகித்ஸா தீபம்

தஞ்சைமாநகரில் பிரஸித்திபெற்ற அரண்மனைக் கண்வைத்யர்களாக புகழ்பெற்று வந்த வைத்ய பரம்பரையில் உதித்தவரும், கண்வைத்திய ஆசிரியராக இருந்தவருமான கரந்தை ஸ்ரீமான் T. S. அம்ருதலிங்கம் பிள்ளை அவர்கள் செய்துவந்த சிகிச்சை முறையை எல்லோருக்கும் உதவும்படி ஒரு சிறு புத்தகவடிவமாக எழுதியுள்ளார். இதுவரை தமிழில் வெளிவந்த கண் வைத்ய புத்தகம் "அகஸ்த்யர் நயனவிதி–500" என்பதாகும். அது மிக விரிவாக இருப்பதால் எல்லோரும் எளிதில் கையாள்வது மிக சிரமமாயிருந்தது. அதிலிருந்து முக்கியமான சிகிச்சைக்குரிய 14 கண் வியாதிகளையும், அவைகளுக்கு அனுபவத்தில்செய்து வந்த சிகிச்சை முறைகளையும் மிகவும் அழகாக இப்போது வெளிவந்திருக்கும் நயனரோக சிகித்ஸா தீபத்தில் காணலாம். தஞ்சை அரண்மனை சரஸ்வதிமஹால் நூல் நிலையத்திலிருந்து வெளியாகும் சரபேந்திரர் வைத்திய முறைகளின் பதிப்பாசிரியரும், பிள்ளையவர்களின் மாணாக்கருமாகிய ஸ்ரீ. S. வெங்கட ராஜன் L. I. M. இப்புத்தகத்தை மிக நல்லமுறையில் பிரசுரித்திருக்கிறார். இப்புத்தகம் அவசியம் ஒவ்வொரு வைத்யரிடமும் இருக்கவேண்டிய புத்தகங்களில் ஒன்றாகும். இதன் விலை அணா. 8.

கிடைக்குமிடம்:— Dr. S. வெங்கடராஜன் L. I. M.

ஸ்ரீரங்கநிவாஸ். 1969. ஸகாநாயகன் தெரு, தஞ்சை

நவீன வைத்யமுறை

சில நவீனவாதிகள், சுதேச வைத்தியத்தில் தற்கால ஆராய்ச்சியாளர்களால் வெளியிடப்பட்டு உலவும் மருந்துகள்போல, ஒரு மருந்தும் இல்லையென்று தம் மனம் போனவாறெல்லாம் கூறிவருவது எவ்வளவு அறியாமையாகும். மேல்நாடுகளிலிருந்து புதுப்புது ஆராய்ச்சிகளால் கண்டுபிடிக்கப்பட்டு வெளிவரும் மருந்துகள் "பனைமரத்தைச் சுற்றி வளர்ந்த கொடியைப்போல" சிறிது நாளையில் அதன் குணக்கேட்டாலோ, வேறுகாரணங்களாலோ மறைந்துபோகப் பின்னும் புதுப்புது மருந்துகள் தோன்றிக்கொண்டே வருகின்றன. இப்படி வெளிப்படுவதும் பிறநாட்டாரின் வியாபார சம்பிரதாயங்களைக் காட்டும் ஒரு கைதேர்ந்த முறையாகும். நமது சுதேச வைத்தியம் அத்தகையதன்று.

—வைத்யன்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீ லக்ஷ்மீ ப்ரஸந்ந வெங்கடேச ஆயுர்வேத தர்ம வைத்யசாலையில் மே மாதத்தில் சிகிச்சை பெற்றவர்கள்.

ஆண்கள்	1776	5011
பெண்கள்	1608	
சிறுவர்	1627	

ஸ்ரீ:

ஆயுர்வேத-கல்வித்திட்ட சீரமைப்பு

வா. பா. நடராஜசாஸ்திரி, ஆயுர்வேதாசார்ய, திருச்சி.

[திருச்சி ஆயுர்வேத சபையின் 21-வது வருஷ ஆரம்ப விழாவில் ஸ்ரீ சாஸ்திரிகள் செய்த பேருரைச்சுருக்கம் இது. ஆயுர்வேதத்தின் வருங்காலத்தைப்பற்றி இடைவிடாது சிந்தனைசெய்யும் அன்னாரின் இவ்வுரை வாசகர்களின் சிந்தனையை நன்கு தூண்டும் என நம்புகிறோம். —ஆசிரியர்]

மேல் நாட்டாரின் அரசாக்ஷி காலத்திலேயே நமது சென்னை மாகாண அரசாங்கம்தான் முதன்முதலில் ஆயுர்வேதத்திற்கு ஆதரவையும், ஒரு அந்தஸ்தையும் கொடுத்து, இதன் அபிவிருத்திக்கு ஆயுர்வேதப் பள்ளிக்கூடத்தையும் நடத்தி வந்து கொண்டிருக்கிறது. பல துறைகளில் போல, ஆயுர்வேத விஷயத்திலும் சென்னை மாகாணமே இதரமாகாணங்களுக்கு ஆதியில் (சுமார் 30 வருஷங்களுக்கு முன்பே,) வழிகாட்டியாயிருந்திருக்கிறது என்று எல்லோரும் பெருமை கொண்டிருந்தனர். இப்பொழுதும் புகழ்கிறார்கள். ஆனால் உண்மையில் நமது மாகாணம் ஆயுர்வேதத்திற்கு அழிவைத் தேடுவதிலேயே முன்னணியில் இருந்தது, இருக்கின்றது என்பதில் ஐயமில்லை.

सम्यक् प्रयोगं सर्वेषां सिद्धिराख्याति कर्मणाम् ।
सिद्धिराख्याति सर्वैश्च गुणैर्युक्तं भिषक्तमम् ॥ என்ற

நீதிப்படி சர்க்காரால் 30வருஷங்களாக நடத்தப்பட்டுவரும் இந்திய வைத்தியக் கல்லூரியில் ஆயுர்வேதம் என்னென்ன துறையில் விசேஷ வளர்ச்சியைப் பெற்றுள்ளது என்ற கேள்விக்கு பதிலளிக்கவே ஸாத்தியமில்லை. ஓர் அணுமாத்திரமும் முன்னேறவில்லை என்பது மட்டுமல்ல; முறைப்படியான ஆயுர்வேதக் கல்வியில்லாததால், தேறி வெளிவரும் மாணவர்களிடையே, வைத்திய சாஸ்திரத்திடம் மனப்பான்மையே முற்றிலும் மாறிவிட்டது. இக்

கல்லூரியின் ஆரம்பநாளில், ஆயுர்வேதம் அதிகமும், அலோபதி குறைவாயும் போதிக்கப்பட்டு வந்தது. பிறகு நாளடைவில் ஆயுர்வேதத்தின் அளவு குறைவாயும், அலோபதியின் அளவு அதிகமாயும் ஆகிக்கொண்டு வந்தது. பிறகு, இப்பொழுது பெயரளவுக்கு ஆயுர்வேதமும், முக்கால் பங்கிற்கு மேல் அலோபதியுமாக பாடக்கற்பனையும் கர்மாப்யாஸ விஷயத்தில் முழுவதும் அலோபதியாகவும் மாறிவிட்டது. சென்னையில் ராயபுரத்திலும், ஸெண்ட்ரலுக்குப் பக்கத்திலும் உள்ள மெடிகல் காலேஜ்களுடன் கீழ்ப்பாக்கத்தில் ஒரு மூன்றுவது அலோபதிக் மெடிகல் காலேஜாக விளங்குகிறது. ஆயுர்வேத ஸம்பந்தம் பெயரளவு மட்டிலேயே இருக்கிறது.

23—3—54 ல், Hindu பத்திரிகை தனது தலையங்கத்தில் இந்தப் பள்ளிக்கூடத்தைப்பற்றி விவரமாக எழுதி இதன் கெடுதல்களை யகற்றவேண்டியதை மிகவும் வற்புறுத்தியுள்ளது. இதற்காக நாம் "Hindu" பத்திரிகைக்கு நன்றி செலுத்தக்கடமைப்பட்டுள்ளோம்.

ஆயுர்வேதாபிவிருத்திக்காக சர்க்கார் கமிட்டிகளை நிறுவுவது காலத்தைக் கடத்துவதற்கு ஒரு உதவி கோலாகின்றதே தவிர வேறில்லை. ஏனெனில், கமிட்டி ஸமர்ப்பிக்கும், ஆலோசனை சிபார்சுப்படி சர்க்கார் நடத்தவேண்டுமென்ற நிர்ப்பந்தம் கிடையாது. முடிந்தவரை நடத்தவும் பிரியப்படுகிறதில்லை; நிபுணர்களின் கமிட்டியின் சிபார்சு எவ்விதமிருப்பினும் பதவியிலிருக்கும் அவரவரின் இஷ்டப்படியேதான் கார்யம் செய்து முடிக்கின்றனர். கமிட்டி நியமனம் வெளிமக்களின் கண்களைத் துடைப்பதற்கே. தவிர, கமிட்டி ஆயுர்வேத மறியாதவரையும், ஆயுர்வேத வளர்ச்சியை விரும்பாதவரையும் கொண்டே அமைக்கப்படும். சோப்ரா கமிட்டியும் இவ்விதமே.

இப்பொழுது ஸமீபகாலத்தில் கடைசியாக சென்னை சர்க்கார் இந்திய வைத்தியக் கல்லூரியின் படிப்புத்திட்டம் முதலியதைப் பற்றிப் பரிசீலனம் செய்ய இம்மாத முதலில் ஒரு கமிட்டியை அமைத்திருப்பதாக Hindu பத்திரிகையில் அறிவித்து, அதை சரியான முறையில் ஆயுர்வேதத்திற்கு வேண்டியதைச் செய்யுமாறு கேட்டுக்கொண்டு, Hindu தன் தலையங்கத்தை முடிக்கின்

றது. இக்கமிட்டி அங்கத்தினர் யாவர் என்று பிரகாசமானதாக எமக்குத் தெரியவில்லை. *

வெளிநாட்டு அரசாட்சி பந்தம் பாரததேசத்திற்கு ஒருவாறு நீங்கியது. ஆனால் வெளிநாட்டு நாகரிக மோஹம் நமது நாட்டின் அரசியல் தலைவர்களில் பலருக்கும், ஜனங்களுக்கும் சிறிதும் நீங்கவேயில்லை. தேசத்தின் ஸுகாதார அபிவிருத்தி, நோய்களின் சிகித்ஸை இவைகளை மேல் நாட்டு முறையில் நடத்துவதற்கு, மேல் நாட்டு வைத்திய சுகாதார முறைகளில் தேர்ச்சி பெற்றவர்களுடைய ஆலோசனையைப் பூர்ணமாய் கேட்டுக்கொள்ளட்டும் நமது சர்க்கார். ஆயுர்வேத சாஸ்திராபிவிருத்தி செய்ய, ஆயுர்வேதமே படிக்காத, மேல் நாட்டு வைத்தியரிடம் பூர்ண அதிகாரமளித்ததால்தான் நமது ஆயுர்வேதம் நமது நாட்டில் இவ்வளவு மலினமாகிவிட்டது. இனிமேலாவது உடனே ஆயுர்வேதாபிவிருத்தியின் பொறுப்பை ஆயுர்வேத வித்வான்களிடமே ஒப்படைக்க வேண்டும்.

ஆயுர்வேதத்திற்கு இந்திய சர்க்கார் இன்னமும் தகுதியான உதவியளிக்காமலிருப்பது பெருத்த அநீதியாகும். ஆயுர்வேதம் "இன்றைக்கும் இந்தியாவில் பெரும்பாலோரின் பிணியையகற்றுகின்றது; மலிவு; மக்களின் நம்பிக்கையதிகம் பெற்றது; நமது நாட்டின் வித்யை; நமது மூதாதையரால் கையாளப்பட்டது; எல்லோருக்கும் எளிதில் இந்நாட்டில் சிரமமின்றி எங்கும்

---

* இது விஷயமாக இந்தியவைத்ய இலாகா கௌரவடைரக்டரிடமிருந்து சமீபத்தில் வந்த தகவல்:— இந்தக் கமிட்டியின் அங்கத்தினர்— இந்தியவைத்ய கலாசாலை பிரின்ஸிபால், ஸித்த ஆயுர்வேத யூனனி வகுப்புகளின் ப்ரதானசிரியர்கள், இந்திய வைத்திய இலாகா கௌரவ டைரக்டர் இவர்கள் ஆவர். அக்கமிட்டியின் கார்யம்:— ஸித்த ஆயுர்வேத யூனனி முறைகளின் அடிப்படை விஷயங்களை இயன்ற வரை இணைப்பது. இம்முறைகளின் போதனையை தேவையான அளவிலுள்ள மூலபாஷைக்கோட்பாடுகளுடன் ஆங்கிலத்தில் செய்ய ஏற்பாடு. ஒவ்வொருமுறையின் போதனையையும் அதன் அடிப்படையிலேயே போதிப்பது. மும்முறைகளிலிருந்தும் இணைக்கப்பட்ட அம்சங்களைப் பற்றி இருவாரங்களுக்கு ஒருமுறை ஒரு சொற்பொழிவு மூலம் எல்லா மாணவர்க்கும் போதித்தல்.

—ஆசிரியர்

ஏராளமாய் கிடைக்கக் கூடியதாகவுமிருக்கின்றது" என்ற இந்தப் பெருமைகளைப் பார்க்கிலும் மேலான ஒரு பெருமை நமது ஆயுர் வேதத்திற்குத் தனிச்சிறப்பை அளித்துக் கொண்டிருக்கிறது. அதுதான் ஆயுர்வேதத்தின் விஞ்ஞான மகத்துவம். ஆயுர்வேதம் அதற்காகவே, உலகில் குன்றாமல், காப்பாற்றப்படவேண்டிய தவசியமும் சர்க்காரின் முக்கியகடமையுமாகும். ஆயுர்வேதமழிந்தால் இந்தியாவிற்குமட்டு மல்ல; உலகிற்கே பெரிய நஷ்டமாகும். நமது சர்க்கார் ஆயுர்வேதத்தை சரியான முறையில் வளர்க்காமல் முறை தவறியிருப்பதைத் திருத்தியமைத்து, சரியான வழியில் ஆயுர்வேதத்தை வளர்க்கச் செய்வது—செய்யவேண்டியது ஆயுர் வேத வைத்தியர்களின் முதற்கடமை.

சென்ற 30 வருஷ காலமாய் ஆயுர்வேதத்தை நடத்தின வழியில் ஆயுர்வேதம் வளரவில்லை, அழிகின்றது. ஆதலால் இதுகாறும் சென்ற வழியை அறவே மாற்றி ஆயுர்வேதத்தை வேறு புதிய வழியில் காப்பாற்றவேண்டும் என்பதே நமது கோரிக்கை.

இது வரையில் சென்ற வழியில் பிரதானத்தவறுதல் ஆயுர் வேதம் பயிலும் மாணவர்கட்கு ஒருவித ஆராய்ச்சியிலும் சோதனை செய்யாமல், அலோபதியை அப்படியே சேர்த்துக் கற்பித்ததேயாகும். இந்த வழி மாணவருக்கு ஆயுர்வேத ஞானம் குன்றி அலோபதியில் மோஹம் அதிகமாகச் செய்துவிட்டது. பிறகு அலோபதி பயின்றவருடன் ஸம அந்தஸ்து, உத்யோகங்களை அடைய விரும்பி மாணவர்களே தங்களுக்கு ஆயுர்வேதத்தைப் பார்க்கிலும், அலோபதியில் அதிகபாடம் கற்பிக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் செய்யும்படியும், அதற்கு சர்க்கார் கட்டுப் படும்படியும் சூழ்நிலை உண்டாகிவிட்டது. இந்திய வைத்தியக் கல்லூரியென்ற பெயருக்கும் கற்பிக்கும் பாடத்திற்கும் ஸம்பந்தம் அற்றுவிட்டது.

ஆகவே தனியாக, அலோபதி கலப்பின்றி சுத்த ஆயுர்வேதம் மட்டுமே ஆயுர்வேதக் கல்லூரியில் மாணவருக்குக் கற்பிக்கும் பாடதிட்டம்தான் ஆயுர்வேதத்தை வளரச் செய்யும். ஆயுர் வேதத்தில் குறைகள் இருக்குமாகில், அவைகளை அறியவும் குறைகளையகற்ற வழியைக் கண்டுபிடிக்கவும் முடியும். இதற்கு

வேண்டிய ஆராய்ச்சிக் கழகங்களை ஆயுர்வேத முறைப்படியே அமைத்துக் கொள்ள வேண்டும். வெளி உலகம் தரும் விஞ்ஞான விசேஷங்களை ஆயுர்வேதம் புறக்கணிக்கவே இல்லை. தேவைகளை யெல்லாம் எடுத்துக் கொள்ளவே உபதேசிக்கின்றது. ஆனால், ஆயுர்வேத சாஸ்திர ஸித்தாந்தப்படி, ஆராய்ச்சிக்கழகத்தில் பரிசோதித்து, ஆயுர்வேத சித்தாந்தப்படி சேர்த்துக் கொண் டால்தான் சரியான பிரகிருதியில் சாஸ்திரம் வளரும். மற்றப்படி விகிருதியாகவே நிற்கும். இந்த வழி ஆயுர்வேதம் நன்ருய்ப் படிக்காதவருக்குத் தெரியாது. ஆதலால் ஆயுர்வேதாபிவிருத் திக்கு வேண்டிய யோசனைகளை நமது சர்க்கார் அலோபதிக் வைத்தியரிடம் ஒப்புவிக்காமல் ஆயுர்வேதம் பயின்றவரிடமே ஒப்புவிக்கும்படி நாம் வற்புறுத்தவேண்டியது அவசியமாகின்றது.

சர்க்கார் ஒரு ஸ்தாபனத்திற்கு ஆயுர்வேதிக் காலேஜ் என்று பெயர் கொடுத்து, அதில் அலோபதிக் விஷயங்களையே பூர்ண மாய் போதித்து வருவது பெருத்த அநீதியாகும். ஆத லால் இந்திய வைத்தியக் கல்லூரி என்ற பெயரிலுள்ள அலோப திக் கல்லூரியில் நமது சென்னை சர்க்கார் செலவழிக்கும் பணத்தையாவது கடைசிபக்ஷம் பூர்ணமாய் சுத்த ஆயுர்வேதத் தில் செலவழிக்கவேண்டும். அல்லது, அலோபதி விஷயமாக இப்பள்ளியிலாவது சிறிதும் செலவழிக்கக் கூடாதென்பதை நாம் வற்புறுத்த வேண்டியதும் மிகவும் அவசியம். சர்க்கார் அலோபதி விஷயத்தில் செலவழிக்கும் தொகையில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட ஆயுர்வேதத்திற்காக செலவழிக்கவில்லை. ஆயுர் வேதக்கல்லூரிக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் அந்த அல்பத் தொகையில் பெரும்பாலான அம்சம் அலோபதிக் பாகத்திற்குத் தான் உபயோகப்படுகிறதென்ருல் இதைப் பார்க்கிலும் பெரிய அநீதி வேறென்ன?

பம்பாய் மாகாண அரசாங்கத்தார் இப்பொழுதுதான் தங் களுடைய தவறுதலை உணர்ந்து, நமது சென்னைபோலவே இது காறும் அங்கும் நடந்துவந்த ஆயுர்வேதம் அலோபாதி இரண் டின் கலவைப் பாடத்தினுல் ஏற்பட்ட ஆபத்தை விலக்குவதற் காக சுத்த ஆயுர்வேதக் கல்வித் திட்டத்தையே சர்க்கார் ஆயுர்

வேதக்கல்லூரியில் வரும் வருஷம் முதல் அமுலுக்குக் கொண்டு வர நிச்சயித்து விட்டனர். நமது சென்னையும், ஆயுர்வேதத்துக்கு இழைத்துக் கொண்டிருக்கும் தீங்கை சீக்கிரத்தில் அகற்றிக் கொண்டு, ஆயுர்வேதத்தைச் சரியான முறையில் வளர்த்து அதனல் நமது நாட்டிற்கு நன்மை வளரும்படி செய்ய நாம் ஸகலவித முயற்சிகளையும் உடனடியாகச் செய்யவேண்டும்.

மஹாமண்டல வெளியீடுகள்

1.	திரட்டு வாகடம்	0—6—0
2.	சித்தர் மூறை	0–12—0
3.	போபதேவசதகம். (தமிழ் மொழிபெயர்ப்பு)	1—4—0
4.	சிகித்ஸா கலிகா ,,	0–12—0
5.	பழைய வைத்ய சந்திரிகை பிரதிகள் ஒரு வருஷத்தியது	2—0—0

தபால் செலவு தனி. வி. பி. கிடையாது. முன்பணமும் அனுப்பவும்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலர்,

27. சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம், திருச்சி.

திருச்சி

ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்

17, சின்னக்கடைத் தெரு,

தெப்பக்குளம் P. O. திருச்சிராப்பள்ளி,

வைத்தியர்களுக்கு

எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த விலைக்கு சப்ளை செய்யப்படும்.

விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

பால சிகித்ஸா

[வைத்ய எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, திருச்சி.]

துணைக்குறிப்பு— (தொடர்ச்சி)

குறை மாதத்தில் பிறந்தாலும், அல்லது தாயின் வயிற்றின் மேல் ஆபரேஷன் செய்து வெளியிலெடுக்கப்பட்டிருந்தாலும் சிசுவின் தலை உருண்டையான வடிவில் காணப்படும். இயற்கையான பூர்ணப் பிரசவத்தில் சிசுவின் தலை நீண்டு கோபுரத்தைப் போல் தோற்றமளிக்கும். தலை உச்சியில் மிருதுவான வீக்கமும் காணப்படும். இது பிரசவமாகும்போது கர்பாசய-யோனிவழியிலுள்ள தசைகளின் இறுக்கத்தால் ஏற்படுவது. இவ்வீக்கம் இயற்கையானது. தனியான சிகிச்சை தேவையில்லை. 3—4 தினங்களில் தானே இயற்கையான வடிவத்தை தலை அடைந்துவிடும்.

இயற்கையாக சுகப்ரசவமாகாது, ஆயுதத்தால் சிசு வெளிப்படுத்தப்பட்டால், ஆயுதத்தின் அழுத்தத்தால் தலையில் வீக்கம், ஆயுதத்தின் அழுத்தம் ஏற்பட்ட பாகத்தில் உண்டாகும். அல்லது நீண்டநேரம் கஷ்டப்பட்டுப் பிரசவமாகும்போதும் தலை பாகத்தில் ஏற்படும் அழுத்தல் மிகுதியால் இவ்வீக்கம் காணப்படும். ஆனால் இவ்வாறு ஏற்படும் வீக்கம் பிரசவித்தவுடன் தோன்றாமல் சில மணிநேரம் கழித்த பின்னர் உண்டாகும். ஆயுதப் பிரசவத்தில் ஏற்பட்ட வீக்கத்தில் வேதனை சிறிது இருக்கும். மற்றவைகளில் வேதனை சிறிதும் இராது. இவ்வீக்கம் தானே கரைந்துவிடும். விசேஷ சிகிச்சை தேவை இல்லை. நல்ல வாதஹர தைலங்களை இலேசாகத் தடவுவதால் மிகவும் உபகாரம் கிடைக்கும். மஹாபலா தைலம் இவ்வீக்கத்தில் மிகவும் நல்லது.

பிறந்து சில மணி நேரங்களில் சிசு தானே மலஜலங்கள் கழிக்கும். சில சமயம் இயற்கையாக மலம் கழிக்கும் ஆஸனத்துவாரத்தின் மேல் மெல்லிய ஜவ்வு மூடிக்கொண்டிருக்கும். இது பூர்ணமாக வளர்ச்சி பெறாத மிகச் சில சிசுக்களிடத்தில் குறை மாதங்களில் ஏற்படும் பிரஸவங்களில் ஏற்படும். கருவளர்ச்சியில் வாயுவின் அபானத்துவாரத்தைத் திறக்கும் காரியம் இயற்கையில் பூர்ணமாகி இருக்காது. இவ் வியற்கைத் தவறை சஸ்திர சிகிச்சையினால்தான் மாற்றமுடியும். சிசு பிறந்த சில மணிநேரங்களுக்குள்ளாகவே இச்சிகிச்சை செய்யப்படவேண்டியிருப்பதால் உடன் இது விஷயமாக கவனம் செலுத்துவது நல்லது. நன்கு சுத்தமான மெல்லிய மண்டலாக்கிரத்தால் ஆஸனவாயை மூடியுள்ள ஜவ்வைக் கிழித்து சுத்தமான விரலின் நுனியில் ரோபண தைலத்தைத் தடவி

உள்பூசி சிறிது நேரம் பஞ்சு வைத்திருக்க துவாரம் சரியாகிவிடும். ஆனால் ஆஸனத்துவார பாகத்தை சரிவர அறிந்துகொண்டவனும் துரிதமான ஹஸ்தலாகவமும் சுத்தமான சஸ்திரம் முதலியவைகளும் நல்ல அனுபவமும் உள்ளவனுமான வைத்யன் தான் இக்காரியத்தைத் தவறில்லாமல் செய்யமுடியும். இவ்விதம் துவாரம் சீராக்கப்பட்ட பின்னரும், அவ்விடத்தில் உள்ள வேதனையால் மலம் வெளிப்படுத்தமுடியாமல் சிசு சிரமப்படலாம். அவ்வப்போது நெய், சிற்றாமணக்கெண்ணெய் போன்றவைகளை ஆஸனத்துவாரத்தில் தடவிக் கொண்டுவர அவ்வேதனை குறையும்.

பல் வேறு காரணங்களால் பிரசவமாவதில் ஏற்படும் தாமதமும் பிரசவ முறையில் உண்டாகும் மாறுபாடுகளும் பிறக்கும் சிசுவிற்குப் பல வித விபத்துகளை ஏற்படுத்துகின்றன. சில சமயம், பிறந்த குழந்தை அழாமல் அசைவற்றுக் கிடக்கும். உடல் நீலம் பாரித்தோ வெளுத்தோ காணப்படும். மூச்சுவிடாது உடல் கனத்து நிற்கும். இதை மூச்சு முட்டல் என்பர். தொப்புள்கொடி சிசுவின் கழுத்தைச்சுற்றி இறுக்குதல்; தொப்புள்கொடி பிரசவமாகும்போது நசுக்கப்படுதல்; பிரசவம் தாமதமாகும்போது சிசுவின் தலை நசுக்குண்டு போதல்; ஆயுதத்தால் ஏற்படும் அழுத்தம்; கருப்பையிலிருந்து வெளியாகுமுன்னரே சிசு மூச்சுவிட ஆரம்பிப்பதாலோ, வேறு எக்காரணத்தாலோ, பனிநீர் மூக்கு வழியாகவோ, வாய் வழியாகவோ உட்சென்றுவிடுதல், தொண்டை முதலிய துவாரங்களில் சளி அடைத்திருத்தல், வெளியிலுள்ள சீதோஷ்ணஸ்திதிக்கேற்ப சிசுவின் உடல்நிலை மாற இயலாமை—இதுபோன்ற பல, மூச்சு முட்டலுக்குக் காரணமாக ஆகின்றன.

உடல் நீலமாக மாறி ஏற்படும் மூச்சு முட்டலில் கீழ்க்கண்ட குறிகள் காணும். உடம்பு சதையைத் தொட்டால் கைக்கு விண் என்று இருக்கும். தொப்புள்கொடி கனமாகப் பருத்துக் காணும். இருதயம் நன்றாகத் துடிக்கும். சிசு அழாது அசைவற்றுக் கிடந்தாலும் சில வினாடிகளுக்கொரு தரம் திடீரென விம்முவது போன்று சுவாசிக்க முயற்சிப்பதைக் காணலாம். இது பிறந்தவுடன் ஏற்படுவது. பிற்பாடும் பிறந்து 2,3 தினங்களுக்கு மேலும் இவ்வாறு கருங்கிரந்தி ஏற்படுவதுண்டு. சிலசமயம் இம் மூச்சுமுட்டல் வேறுவிதத் தோற்றம் அளிப்பதுண்டு. அதில் சிசு அழாது அசைவற்றுக் கிடப்பதுடன் உடல் முழுவதும் வெளுத்துச் சாம்பல் பூசினாற்போலாகும். சர்மத்தைத் தொட்டால் நைந்த துணியைத் தொடுவதுபோல் தளர்ந்திருக்கும். நாடித்துடிப்பு பலவீனமடைந்து காணும். சிசு மூச்சுவிடவே முயலாதுபோல் காணும். இந்நிலைகள் வருமுன் காப்பதுதான் சிறந்தது. அதாவது நீண்ட நேரமாகும் பிரஸவங்களிலும் ஆயுதப்பிரஸவங்களிலும் கொடி சுற்றிப் பிறக்கும் சிசுக்களுக்கும் மூச்சுமுட்டல் ஏற்படலாம் என எதிர்பார்த்து ஆவன செய்வது தான்

சிறந்தது. பிறந்தவுடன் உடல் நீலம் பாரித்து மூச்சுமுட்டல் காணப்பட்டால் தாமதியாது வாய் தொண்டை இவைகளில் இருக்கும் சளியை துணி சுற்றிய விரலால் துடைத்து எடுப்பதும், தொப்புள் கொடியை இறுக்கிக்கட்டி தாயிடமிருந்து சிசுவைப் பிரித்து மஹாபலாதைலம் முதலிய வாதஹர தைலங்களைத் தடவுவதும், ஸர்வகந்தோதகம், பால் மரப்பட்டை கஷாயங்கள், சிற்றாமுட்டி ஸ்னானகஷாயம் முதலியவை அல்லது சுத்தஜலம் இவைகளில் ஒரு திரவத்தை இளம் சூடாக்கி அகன்ற பாத்திரத்திலிட்டு, அதில் சிசுவை கால்கள் வயிறு மட்டும் அமுங்கும்படியும், தலையும் மார்பும் நீர்மட்டத்திற்கு வெளியேயிருக்கும்படியும் போட்டு செயற்கையாக சுவாசிக்க உதவிசெய்தலும் வேண்டும். பிறகு சிசுவை எடுத்து நன்கு துடைத்து காய்ந்ததுணி கம்பளி இவைகளின் நடுவில் சுகமாகக் கிடத்தவேண்டும். இவ்வகையிலும் மூச்சுமுட்டல் விலகாவிடில், கோரோசனை, ஸஞ்சீவி மாத்திரை போன்ற காரமருந்துகள் கொடுத்து கபத்தை வெளிப்படுத்துவது நல்லது. தொண்டையில் சிக்கியிருக்கும் கபத்தை வெளிப்படுத்த சிறு ரப்பர் குழாயை குழந்தையின் வாயில் தொண்டைவரை நுழைத்து, மறு நுனியை தம் வாயில் வைத்து உறுஞ்சுவதால் கபம் குழாய்வழியே வெளிப்படும். இவ்விதம் சிகிச்சை செய்தபின்பு சிசுவை கைகளில் தூக்கி அலட்டக்கூடாது. ஆகாரம் புகட்டுவதிலும் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

உடல் வெளுத்துக்காணும் மூச்சுமுட்டல் ஏற்பட்டால் சிசு பிழைப்பது அரிது. உடலில் ரத்த ஓட்டம் மிகவும் குன்றித்தான் இந்நிலை ஏற்படுகின்றது. இதிலும் மேற்கண்டவாறு சிகிச்சை அளிக்கலாம். சில சமயம் பிழைத்தாலும் அங்கவீனம் ஏற்படும்.

மூச்சுமுட்டல் ஏற்பட்டுத் தெளிந்தபின்னர் மறுமுறை மூச்சுமுட்டல் வாராது பாதுகாக்கவேண்டும். சிசுவைத் தாயிடம் கொடுத்துப் பால் கொடுக்கச் செய்வதைவிட, தாயின் பாலை பீய்ச்சி எடுத்து தேக்கரண்டியினல் புகட்டுவது நல்லது. சிசுவைத் தொட்டிலில் கால்பக்கம் சிறிது தாழப்படுக்கவைக்கவேண்டும். அதிகமாக கையில் தூக்கவே கூடாது. மூளையில் ரத்த அழுத்தம் அதிகமானதாலோ, ஆயுதப் பிரஸவத்திலோ ஏற்பட்ட மூச்சுமுட்டலில் இவை மிகவும் கவனிக்கப்படவேண்டும். சிசுவிற்கு சிறிதளவு கூட நெகிழ்ச்சி, அதிர்ச்சி ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும்.

இவ்வதிகாரத்தில் மிகவும் விசேஷ பலனளிக்கும் மஹாபலாதைலத்தின் செய்முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஸுச்ருதஸம்ஹிதையின் ஸூதிகாரோக சிகிச்சையில் காணப்படும் இம்முறை மற்ற முறைகளை விட சிறந்ததென அனுபவஸ்தர்கள் கூறுகிறார்கள்.

மஹாபலாதைலம்:— நல்லெண்ணெய் ஒரு பங்கு; சிற்றாமுட்டிவேர் கஷாயம் 8 பங்கு, தசமூலகஷாயம் 8 பங்கு, யவையரிசி, இலந்தை

விதை, கொள்ளு இவைகளின் கஷாயம் 8 பங்கு, பசுவின் பால் 8 பங்கு, (ஆக எண்ணெய்க்கு 32 பங்கு திரவங்கள்) எண்ணெய்க்கு நிறை அளவில் நான்கில் ஒரு பங்கு கீழே கூறப்படும் கல்க திரவ்யங்கள். இவைகளைச் சேர்த்து முறைப்படி காய்ச்சிய தைலம் மஹாபலாதைலமாகும்.

கல்கத்திரவ்யங்களாவன:—காகோலீ, க்ஷீரகாகோலீ (இரண்டும் கிடைக்காவிடில் அமுக்கராக்கிழங்கு) ஜீவகம், ருஷபகம் (இரண்டும் கிடைக்காவிடில் நிலப்பூசனிக்கிழங்கு—விதாரீ) காட்டுளுந்து வேர், காட்டுப்பயறு வேர், மேதா, மஹாமேதா (இரண்டும் கிடைக்காவிடத்து தண்ணீர்விட்டான் கிழங்கு) சீந்திற்கொடி, கர்கடசிங்கி, மூங்கிலுப்பு, பத்மகம், நீரதி மதுரம், ருத்தி, விருத்தி (இரண்டும் கிடைக்காவிடத்து நிலப்பனைக் கிழங்கு) கீரைப்பாலை, அதிமதுரம், இந்துப்பு, காரகில், மருத்துவெள்ளை, ஸரள தேவ்தாரம், தேவதாரம், மஞ்சிட்டி, சந்தனத்தூள், வாஸனைகோஷ்டம், சிற்றேலம், மாகாளி, ஜடாமஞ்சி, கல்பாசி, பச்சிலை, அஸாருன், நன்னாரி, வசம்பு, தண்ணீர்விட்டான் கிழங்கு, சோம்பு, மூக்கரட்டை இவை.

இந்த தைலம் எல்லா வாதரோகங்களிலும் சிறந்தது. விசேஷமாக ஸூதக வாயு நோய்களிலும் யோனி ரோகங்களிலும், யோனிக்குள் பிசு வைப்பதற்கும், ஸ்னானம் செய்வதற்கும், உள்ளுக்குச் சாப்பிடுவதற்கும் பஸ்தி கொடுப்பதற்கும் சாலச் சிறந்தது. சுக்கில தோஷத்தையும் ரஜோ தோஷத்தையும் போக்கி நல்ல புத்திரன் உண்டாகும். வாயுவினால் கூம்பியதும், மர்மத்தில் அடிபட்டதும், நசுக்கப்பட்டதும், ஒடிந்ததும், தளர்ச்சியுற்றதுமான அங்கங்களுக்குப் பூச மிகச்சிறந்தது. ஆறுமாதங்கள் தொடர்ந்து உபயோகிக்க எவ்விதத் தசைத்தளர்ச்சியும் நீங்கும். விசேஷமாக குடலிறக்கத்தில் நல்ல குணமளிக்கும்.

ஸர்வகந்த திரவ்யங்கள்:—ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, கூடம், வால்மிளகு, காரகில், குங்குமப்பூ, கிராம்பு இவை ஸர்வகந்த திரவ்யங்களாகும். ஏலாதிகணத்திரவ்யங்களையும் ஸர்வகந்த திரவ்யங்களாகக் கருதுவது உண்டு. இத்திரவ்யங்களைப் பொடிசெய்து ஸ்னானத்திற்குத் தயாராகும் வென்னீரில் தூவி மூடிவைக்க அது ஸர்வ கந்த ஜலமாகும்.

(தொடரும்)

மூலிகை.

மூலிகைகளை அதன் தன்மை தெரியாமல் உபயோகித்தால் அது விஷம்போல் தீங்கை அளிக்கும்; ஆயுதம் போல் பீடிக்கும்; தீபோல் எரிக்கும்; இடிபோல் அமுத்திவிடும். அதைத் தெரிந்து உபயோகித்தால் அம்ருதம் போல் ஆரோக்யத்தை அளிக்கும்.

—சரகர்.

ஔஷத சூர்ணம்—2

சந்திரப்பிரபாவடீ

யோகரத்நாகரம், பைஷஜ்யரத்னாவளி, சார்ங்கதரஸம்ஹிதை ஸித்தயோக ஸங்கிரஹம் முதலிய நூல்களிலுள்ளது. யோகத்தில் சேரவேண்டிய சரக்குகள் அனேகமாக எல்லா நூல்களிலும் ஒற்றிருந்தபோதிலும், அளவில் சற்று மாறுதல் காணப் படுகின்றது. இம்முறை ஸித்தயோக ஸங்கிரகத்தை ஆதாரமாகக் கொண்டது.

பூலாங்கிழங்கு, வசம்பு, கோரைக்கிழங்கு, நாட்டு நிலவேம்பு, சீந்திற்கொடி, தேவதாரு, மஞ்சள், அதிவிடயம், மரமஞ்சள், கண்டந் திப்பிலி, கொடிவேலிவேர், மல்லி விதை, கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லி முள்ளி, செவ்வியம், வாய் விடங்கம், யானைத் திப்பிலி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், சத்திச்சாரம், யவச்சாரம், இந்துப்பு, ஸௌவர்சிலை உப்பு, கடல் உப்பு, ஏலரிசி, வால்மிளகு, நெரிஞ்சில் முள், வெண் சந்தனம் இவை வகைக்கு கால்தோலா, செவதைவேர், தந்தீ மூலம், லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, ஏலரிசி, மூங்கிலுப்பு இவை வகைக்கு ஒரு தோலா, அயஸ்ஸிந்தூரம் 2 தோலா, சீனிச் சர்க்கரை 4 தோலா, கோமூத்ரசிலாஜது 8 தோலா, மைசாக்ஷி குக்கில் 8 தோலா.

இவைகளில் குக்கில், சிலாஜது, ஸிந்தூரங்கள், சர்க்கரை இவைகளைத்தவிர, மற்றவைகளை நன்கு இடித்துத் துணியில் வடிகட்டிக் கொள்ளவும். குக்கிலை மண் கல் தூசி அகற்றி சுத்தமாக்கிக் கொண்டு அகண்ட உரலிலிட்டு இடித்துவரவும். குக்கில் நைந்தவுடன் அதில் முறையே சிலாஜது ஸிந்தூரங்கள் மற்றவைகளின் சூர்ணங்கள் சேர்த்து இடித்துக்கொண்டேவரவும். எல்லாம் ஒன்ருகி மாத்திரை உருட்டும் பக்குவத்தை அடைந்தவுடன் 6-8 யவ அளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக் கொள்ளவும். மாத்திரை உருட்ட சரியாக அமையாவிடில் சிறிது சிறிதாக சீந்திற் கொடி கஷாயம் விட்டு இடித்தரைத்துப் பிறகு மாத்திரை செய்து கொள்ளலாம்.

அளவு—அனுபானம்: 1–2 மாத்திரை. காலை மாலை ஆகாரத்திற்குமுன்னர் அல்லது பகல் இரவு போஜனத்திற்குப் பின்னர், சூடான பால், சீந்திற்கொடி கஷாயம், மரமஞ்சள் கஷாயம், வில்வ இலைச்சாறு, நெரிஞ்சில் முள் கஷாயம், தேன் கலந்த ஜலம் இவைகளில் ஏதாவதொரு திரவத்தை அனுபானமாகக் கொண்டு சாப்பிடவும்.

குணம்—உபயோகம்: இந்த மாத்திரைகள் மூத்திரப்பெருக்கி உறுப்புகளிலும் இந்திரிய உறுப்புகளிலும் ஏற்படும் நோய்களில் மிகச் சிறந்த மருந்து. உடல் வலிவு, புஷ்டி, காந்தி இவைகளை அதிகப்படுத்தும். பிரமேகம், வெள்ளை, வெட்டை இவைகளினால் ஏற்படும் வாத நோய்களும், பாண்டுவும், மல மூத்திரம் கழிக்கும் போது விந்து நழுவுதல், பஹு மூத்திரம் என்ற அதிக நீர்கழிவு, சுக்கில நோய், நீர்ச் சுருக்கு, நீரடைப்பு, இடுப்புவலி, பார்வை மங்கல், மற்றும் ஸ்திரீ புருஷர்களில் ஜனன உறுப்புகளிலும் மூத்திராசயத்திலும் ஏற்படும் நோய்கள், அவைகளால் ஏற்படும் உபத்திரவ நோய்கள் இவைகளில் மிகவும் நல்ல குணமளிக்கின்றது. நீர் பிரியும்போது ஏற்படும் எரிச்சல், கடுப்பு, நீரில் ஆல்புமின் காணுதல், மூத்திராசயம், ஜனனேந்திரியம் இவைகளின் பலவீனம் முதலியன இதன் உபயோகத்தால் நன்கு மறைகின்றன. புதிய சுக்கில உத்பத்தியும், ரத்தத்தின் சுத்தியும் ஏற்படுகின்றது. சுக்கிலத்தை சுத்திசெய்து கர்ப்பமேற்படுத்தத் தகுதி யளிக்கின்றது. அதனால் பிள்ளைப் பேறில்லாது சுக்கில தோஷமுள்ளவர்களுக்கு இது நல்ல குணமளிக்கும்.

விவரணம்: மூத்திரத்தில் ஏற்படும் கெடுதிகளால் மூத்திராசயத்திலும் மூத்திரமார்க்கத்திலும், கெடுதிகள் ஏற்படுகின்றன. அதனால் மூத்திரம் வெளிவரும்போது எரிச்சல், சிறுநீர் சிவந்திருத்தல், துர்நாற்றம் முதலியவை ஏற்படுகின்றன. இவ்வகையில் ரத்தத்திலிருந்து மூத்திரத்தைப் பிரிக்கும் விருக்கங்களில் புண்ணோ பலவீனமோ ஏற்பட மூத்திரக் கெடுதியும், மூத்திரத்தில் ஆல்புமின், சர்க்கரை, சீழ் முதலியவை வருகின்றன. மூத்திரத்தை ரத்தத்திலிருந்தும் பிரிப்பது குறைந்து நீர்ச்சுருக்கும், ரத்தத்திலுள்ள தோஷங்கள் மூத்திர மூலம் வெளிப்படாததால் உடலில்

அவ்விஷம் பரவி, வாத குண்டலிகாசோபம், சந்திகளில் வலி, குடைத்தல் வலி, உடலில் எரிச்சல், உடல் கனத்துப்போதல் போன்றபல உபத்ரவங்கள் ஏற்பட ஹேதுவாகின்றது. இவ்வகை நோய்களில் சந்திரப்பிரபாவடியின் உபயோகம் நல்ல குணமளிக்கின்றது. சந்திரப்பிரபா, சிறுநீரை நன்கு பிரித்து ரத்ததோஷத்தைவிலக்கி ரத்தத்தை சுத்தி செய்யும் குணமுடையதாகையாலும் மூத்திராசயம், விருக்கம், மூத்திரமார்க்கம் இவைகளில் ஏற்படும் எவ்வகைப் புண்களையும் ஆற்றவல்லது. குக்குலு சிலாஜது ஸ்வர்ண மாக்ஷிகம் முதலியவை விஷ தோஷத்தை முறிக்கவல்லனவாகையால், ரத்தத்தில் கலந்துள்ள தோஷங்களை அறவே அகற்ற வல்லது.

வெகுநாட்பட்ட வெள்ளை வெட்டை நோய்களில் சந்தனாஸவம், ஸாரிவாத்யாஸவம் இவைகளுடன் உபயோகிக்க நல்ல குணமளிக்கும். கர்ப்பாசயத்திற்கு வலியூட்டி வெள்ளைவெட்டை முதலியவைகளால் இழந்த காந்தி, பலம், ஜீர்ணசக்தி இவைகளைத் திருப்பி அளித்து சந்திகளில் வலி, மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வலி, வெகுநாட்கள் வரை உதிரம் பட்டு வருதல் முதலியவைகளைச் சீர்செய்கின்றது.

அதிகமாக சம்போகம், ஸ்வப்னஸ்கலிதம், முதலியவைகளால் இழந்த சுக்லத்தையும், மாதவிடாய் காலத்தில் அதிகமாக ஏற்படும் ருதிரப்பெருக்கையும் சீர்செய்யும்.

சிலாஜதுவடீ

இம்முறை ஸித்தயோக ஸங்கிரகத்திலுள்ளது. திரிவங்க பஸ்மம் 3 தோலா, நிழலில் உலர்த்தி எடுத்த வேப்பிலைத் தூள் 10 தோலா, குடமார் இலைத் தூள் 10 தோலா, கோமூத்ர சிலாஜது 15 தோலா;

இவைகளில் முதலில் கோமூத்ர சிலாஜதுவைக் கல்வத்திலிட்டு திரிவங்க பஸ்மம் சேர்த்து அரைத்துப் பிறகு மற்ற சூர்ணத்தையும் அரைத்து ஒன்றுக்கி வேப்பிலை கஷாயம் அல்லது குடமார

இலை கஷாயம் அல்லது இரண்டின் கஷாயமும் விட்டரைத்து 6—8 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும்.

தினம் 3—4 வேளை. வேளைக்கு 1—2 மாத்திரைகள். சுத்த ஜலம், மஹாமஞ்சிஷ்டாதி கஷாயம், மஞ்சள்—நெல்லிக்காய் ஸ்வரஸம் அல்லது கஷாயம், தேன் கலந்த ஜலம் இவைகளில் ஒன்றுடன் சாப்பிட்டு வரவும்.

பஹு மூத்திரம் எனும் சிறுநீர் அதிகமாக வெளியாகும் மேஹத்திலும், மதுமேஹத்திலும் நல்ல குணமளிக்கும்.

குடமார் என்பது பம்பாய் முதலிய மாகாணங்களில் அதிகமாகக் கிடைக்கும்.

இந்த யோகத்தில் விசேஷ குணத்தை விரும்புபவர்கள் இதில் ஸ்வர்ணபஸ்மம் ஒரு தோலா வரை சேர்த்து மாத்திரைகள் செய்து உபயோகிப்பது நல்லது.

ஔஷதம்

பெயர், ரூபம், குணம்—இம்மூன்று வகைகளால் அறியப்படாத ஔஷதமும், அல்லது அறியப்பட்டிருந்தபோதிலும் சேர்க்கவேண்டிய முறை தவறி விரோதமாய்ச் சேர்க்கப்பட்ட ஔஷதமும் கெடுதலையே செய்யும். நன்ருய் அறிந்து முறைதவருமல் செய்யப்பட்ட ஔஷதம் அம்ருதம்போல் ஆரோக்யத்தை அளிக்கும். —சரகர்.

பாரத ஆயுர்வேத சாலா

27. சின்னக்கடைத் தெரு. தெப்பக்குளம், திருச்சி.

எல்லாவித சாஸ்திரீயமான

— ஆயுர்வேத மருந்துகள் —

மிகக் கவனத்துடன் தயாரிக்கப்பட்டவை.

வைத்யர்களுக்கு விசேஷ சலுகை உண்டு.

விபரத்திற்கு எழுதவும்,

இந்திய வைத்யக்கல்லூரி:

அரசாங்கத்தின் மழுப்பல்

[19—வது தமிழ்நாடு ஆயுர்வேத மகாநாட்டில் இந்திய வைத்யக் கல்லூரியில் சமீபத்தில் புகுத்தப்பட்ட பாடத் திட்டமாறுதல்களையும் மூலிகைத் தோட்டம், பஞ்சகர்மவார்டு முதலியவைகளில் அநுஷ்டிக்கப்படும் முறையற்ற சிக்கனங்களையும் பற்றி சர்க்காருக்கு நாம் அனுப்பித்த தீர்மானங்களுக்கும்; மற்றும் தினசரிகளில் வெளிவந்த புகார்களுக்கும் சென்னை சர்க்காரின் செய்தி இலாகா பத்திரிகைகளுக்குக் கொடுத்த தகவலைக் கீழ் கொடுத்திருக்கிறோம். தொடர்ந்து அவைகளைப்பற்றி மஹாமண்டலத்தின் அபிப்ராயத்தை ஒட்டி நமது காரியதரிசி ஸ்ரீ. K. ராகவன் பத்ரிகைகளுக்கு அனுப்பிய அறிக்கையையும் கீழ் வெளியிட்டிருக்கிறோம். இந்திய வைத்ய விஷயமாக சென்னை அரசாங்கத்தின் கொள்கைகள் எத்தகையதாக இருக்கின்றன-என்பதை இவை நன்கு புலப்படுத்தும்.]

—ஆசிரியர்

புகார்களுக்கு சர்க்கார் பதில்

சென்னை அரசாங்க செய்தி இலாகா டைரக்டர் அனுப்பியுள்ள கடிதத்தில் கூறுவதாவது:

இந்திய வைத்யக் கல்லூரி பற்றி சில குறைபாடுகள் பிரஸ்தாபிக்கப்படுவதைச் சர்க்கார் கவனித்தனர். கடிதம் எழுதியவரின் முக்கியமான கண்டனம் "பூரா முக்கியத்துவமும் இந்திய வைத்தியத்துக்குக் கொடுக்கப்பட வேண்டியதற்குப் பதிலாக நவீன வைத்தியத்துக்கு அளிக்கப்பட்டிருக்கிறது." என்பது தான். இதுசம்பந்தப்பட்ட மட்டில் கீழ்க்கண்ட விஷயத்தை நாம் குறிப்பிடவேண்டியிருக்கிறது.

அதாவது இந்திய வைத்தியப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப் படுவதற்குமுன்னர் இந்த ஸ்தாபனம்-பற்றிய சிபாரிசுகள் செய்வதற்காக 1921-ல் நியமிக்கப்பட்ட உஸ்மான் கமிட்டி இந்திய வைத்தியப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குப் போதிக்கும் பாடத் திட்டத்தில் இந்திய வைத்திய முறைகளில் அவர்களுக்குச் சிறந்த பயிற்சி அளிப்பதுடன் மேனாட்டு வைத்திய முறையின் (நவீன

வைத்தியம்) முக்ய அம்சங்களிலும் போதனை அளிக்க வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்திருந்தது. இதன் நோக்கம் என்னவென்றால் இந்திய வைத்திய மாணவர்களும் நவீன வைத்தியத்தில் அடிப்படைகளை அறிந்திருக்கவேண்டும் என்பதுதான்.

மறுபடியும் 1946ம் வருஷம் இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட சோப்ரா கமிட்டியும், மேனாட்டு (நவீன) வைத்திய முறையும் நாட்டுவைத்திய முறைகளும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று எவ்வளவோ விதங்களில் அனுசரணையாக இருக்க வழிகளிருக்கிறதென்றும் இவ்விரண்டும் ஒருங்கே ஒரு முகமாக்கப்பட்ட சரியான வைத்திய முறையினால் ஜனசமுதாயமே பெரிதும் நலனடையுமென்றும் இவ்விதக் கலப்படமான கூட்டு முறை அவசியமென்றும் மக்களுக்கு வைத்திய உதவி அளிப்பதற்கு, குறிப்பாக கிராமவாசிகள் வைத்திய நிவாரணத்துக்கு இவ்விரு முறைகளும் ஒருங்குபடுத்தப்பட்டால் மிக அனுகூலமாகவிருக்கு மென்றும் கூறியிருக்கிறது. கமிட்டி மேலும் தெரிவித்துள்ளதாவது: ஒருங்குபட்ட ஒரேமாதிரியான வைத்திய முறையை வகுக்க வேண்டியது அதி அவசியமான காரியமாகும்: எனவே ஒரு முறையில் தேவையான அம்சங்களை மற்றொரு முறையிலுள்ள அனுகூலமான அம்சங்களை கொண்டு பலப்படுத்தி பண்படுத்தப்பட்ட ஒரு பாடப் பயிற்சி போதனா முறையை வகுப்பதன் மூலம் இருமுறைகளும் சேர்ந்து கூட்டு முறையைச் சிருஷ்டிக்கலாம் என்பதாகும்.

கடைசியாக 1949-ம் வருஷம் நாட்டு வைத்திய முறைகள் பற்றிய ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவுவதற்கு இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட பண்டிட் கமிட்டியும் வைத்தியத் தொழில் பயிற்சி அளிக்கப்படும் ஒவ்வொருவருக்கும் நவீன வைத்திய ஞானமும் இருக்க வேண்டும் என்றும் எனவே நாட்டு வைத்திய முறை பள்ளிக் கூடங்களில் இரண்டு முறைகள் பற்றியும் கூட்டான போதனா பயிற்சி அளிக்கப்பட வேண்டு மென்றும் கூறியிருக்கிறது.

போதனா திட்டம்

இக்கமிட்டிகளின் சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டு தான் நம் சர்க்காரும் நவீன வைத்திய முறையில் நல்ல பயிற்சி

இந்திய வைத்திய மாணவர்களுக்கு அளிப்பதால் அவர்கள் வைத்திய நிவாரணமளிப்பதில் மேலும் தேர்ச்சியுள்ளவர்களாக ஆகிறார்களென்றும், குறிப்பாக கிராமப் பிரதேசங்களில் அவர்கள் இதனால் நல்ல சேவை செய்யக்கூடுமென்றும், இதனால் அங்கீகரிக்கப்பட்ட நாட்டு வைத்திய முறைப் பயிற்சி எவ்விதத்திலும் நசுக்கப்பட மாட்டாதென்றும் கருதினார்கள். எனவே பலவிதமான முறைகளையும் ஆராய்ந்தறிந்து அவ்வவற்றின் குணுகுணங்களை நன்கு கண்டுதான் அவற்றிலுள்ள நல்ல அம்சங்கள் யாவும் ஒன்று திரட்டப்பட்டுக் கூட்டு முறையைக் கூடுமான அளவு உருவாக்கமுடியும், இப்படி சிருஷ்டிக்கப்படும் முறைதான் உலகம் பூராவுக்கும் ஒத்ததான சிறந்ததான வைத்திய முறையாகும். இந்த நோக்கத்துடன் தான் சர்க்கார் இந்திய வைத்தியக் கல்லூரி பாடபோதனை திட்டத்தைத் திருத்தி அமைக்க முற்பட்டிருக்கிறார்கள். இப்படித் திருத்தியமைக்கப்பட்ட முறையில் இந்திய வைத்திய மாணவன் நவீன வைத்தியத்தைப் பற்றி முன்பை விட அதிகம் தெரிந்து கொண்டு தர்சனங்களை விஞ்ஞான ரீதியிலும், பகுத்தறிவுக்கொத்த ரீதியிலும் அறிவுறுத்த வேண்டியது அவசியமாகத்தான் ஏற்படும். ஆகையால் இந்தமாதிரி பயிற்சியில் நாட்டு வைத்திய முறைப் பயிற்சிக்கு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் காலத்தை விட நவீன வைத்திய முறைப் பயிற்சிக்கு அதிகமான காலம் ஒதுக்கப்பட்டிருப்பது இயற்கையாகவே எதிர் பார்க்கப்பட வேண்டிய விஷயமே: இப்பயிற்சி மாணவர்களின் திறமையை அதிகப்படுத்துவதுடன் நாட்டு வைத்திய முறையில் மக்களுக்கு அவர்கள் நன்கு சேவை செய்யவும் உதவியாக இருக்கும்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள நோக்கத்துடன்தான் நாட்டு வைத்திய மாணவர்களுக்கும் நகர ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளின் படுக்கைகள் பக்கத்திலேயே ஆசிரியர் மாணவர்களுக்கு நோய்கள் பற்றி திருஷ்டாந்த பாடம் கற்பிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் இம்மாணவர்களும் நவீன வைத்திய நிலயங்களிலிருந்து நோயாளிகளை கவனித்து சிகிச்சை முறைகளையும் தெரிந்து கொள்ளுகிறார்கள். இந்தப் பயிற்சி இவர்கள் விடுமுறை நாட்களில் தங்கள் ஊர்களுக்குப் போகும்போதும் தொடர்ந்து நடைபெற தலைமை ஆஸ்பத்திரிகளில் ஏற்பாடு

செய்யப்பட்டிருக்கிறது. கடைசியாக இவர்களும் தங்கள் பயிற்சியைப் பூர்த்திசெய்து முடிந்த பின் நவீன வைத்தியமுறை பட்டதாரிகள் போலவே ஒரு வருஷம் ஹவுஸ்-சர்ஜன் பயிற்சி பெற வேண்டுமென்றும் கோரப்பட்டிருக்கிறது.

பஞ்சகர்மா வார்டு மூடப்பட்டுவிட்டதாகக் கடிதகர்த்தா கூறுவது சரியல்ல. உண்மை என்னவென்றால் தைலம் தடவி உடம்பின் உறுப்புகளை உருவிப் பிடிப்பது. உருவிவிடுவதினால் எதிர் பார்த்த பலன்கள் கிடைக்கவில்லை என்பது கவனமான பரிசீலனையினால் புலனாயிற்று.

எனவே பரீட்சார்த்தமாகத் தவிர,மற்றபடி இம்முறை வைத்தியம் கைவிடபபட்டது. இதுதான் நடந்த விஷயம். இதிலிருந்து 30 படுக்கைகளில் நான்குமட்டும் தைலம் தடவி உடம்பைப் பிடிக்கும் முறையின் பரிசீலனைக்காக வைத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதர படுக்கைகள் பொது ஆயுர்வேத முறையில் நோயாளிக்குச் சிகிச்சை அளிக்க வைத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

போதனு மொழி.

இந்திய வைத்தியக் கல்லூரியில் ஆங்கிலம் பாட போதனு மொழியாக்கப்பட்டது பற்றிய புகார்பற்றி கவனிப்போம். 1953-ம் வருஷம் ஜூலை மாதம் ஆயுர்வேதப்பிரிவு மாணவர்கள் சம்ஸ்கிருதம் படிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படவேண்டியதில்லை என்றும், இதனுல் அவர்களுக்கு அனுவசிய சிரமம்தான் ஏற்படும் என்றும், அப்படிக்கின்றி அவர்கள் சம்ஸ்கிருதம் பயின்ருலும் கூட அவர்களால் பண்டைக்கால நூல்களிலுள்ள விஷயங்களைக் குறுகிய காலத்தில் படித்துப் புரிந்துகொள்ளமுடியுமா என்பதும் சந்தேகமென்றும் கருதப்பட்டது. ஆயுர்வேத வைத்தியப் பயிற்சிக்குச் சேர்ந்துள்ள மாணவர்களில் பெரும்பாலோர் தமிழ், தெலுங்கு, மலையாளப் பிரதேசங்களிலிருந்து வந்தவர்களாதலால் இவர்கள் யாவருக்கும் ஆங்கில மொழியில் போதனையை அளிப்பதன்மூலம் பொது வகுப்பு நடத்தக்கூடும். ஏனென்ருல், இப் பாஷையை எல்லா மாணவர்களும் தெரிந்திருக்கிருர்கள். நாட்டு வைத்தியத்தின் பிரதான அம்சங்கள் பற்றி ஆங்கிலத்தில் பாடங்கள் கற்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. தற்காலமாக முன்புள்ள

படியே சம்ஸ்கிருதம், தமிழ் பாஷைகளிலும் பாடபோதனைகள் நடந்துவருகின்றன. பல பிரிவுகளிலுமுள்ள மாணவர்களையும் பல பாஷா வாரி ரீதியில் பாகுபடுத்தி அவரவர்களுக்கு அந்தந்த பாஷையில் பாஷாவாரி வகுப்புகளில் பாடபோதனை செய்வது நிர்வாக ரீதியில் சாத்தியமான காரியமல்ல. மாணவர்கள் யாவரும் ஆங்கிலம் தெரிந்தவர்களே; எனவே இவர்கள் யாவருக்கும் ஒருங்கே தான் நடைபெறுகிறது. பாடங்கள் ஆங்கில மொழியின் மூலம் அவர்களுக்கு விளக்கி வைக்கப்படுகின்றன.

மூலிகைகள் நிலையம் மூடப்பட்டுவிட்டதாக கடிதகர்த்தா கூறுவது உண்மையல்ல. கல்லூரிக்கு ஒரு மைல் தூரத்திலுள்ள அரும்பாக்கம் கிராமத்தில் சர்க்காரால் பெருஞ் செலவில் மூலிகைகள் பண்ணை ஒன்று ஏற்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டும் வருகிறது. தங்களுக்கு வேண்டிய மருந்துகளை மக்கள் வைத்திய ஸ்டோர்களிலிருந்தும், ஔஷத நிலயங்களிலிருந்தும் வாங்கிக் கொள்ளுகிறார்களாதலால், கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ள ஔஷதசாலையை மாணவர்கள் பயிற்சிக்காகவன்றி, வேறு எதற்காகவும் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. இதுபற்றி சர்க்கார் இன்னும் யாதொரு முடிவுக்கும் வரவில்லை.

இந்த சந்தர்ப்பத்தில் சர்க்கார் ஒரு விஷயத்தை நன்கு தெளிவுபடுத்த விரும்புகிறார்கள்: அதாவது இந்திய வைத்திய பள்ளிக்கூடம் கல்லூரியாக மாற்றப்பட்ட பின்னர் செய்துள்ள மாறுதல்களின் லட்சியம் இந்திய முறைகளும் நவீன முறைகளும் சேர்ந்த கூட்டு வைத்திய முறையொன்றைக் கூடுமான அளவுக்கு உருவாக்கவேண்டுமென்ற அபிலாஷைதான். பலமுறைகளிலும் பயிற்சி பெற்ற டாக்டர்கள் எல்லாவித நோயாளிகளுக்கும் ஏதாவது ஒரு வழியிலோ வகையிலோ வைத்திய சகாயம் செய்வது சாத்தியமாக வேண்டுமென்பதே சர்க்காரின் விருப்பம்."

இந்தியவைத்தியப்படிப்புமாறுதல்களை ரத்துசெய்யவேண்டுகோள்

தமிழ் நாடு ஆயுர்வேத மகா மண்டலக் காரியதரிசி ஸ்ரீ. கே. ராகவன் வெளியிட்டுள்ள அறிக்கையின் கருத்தாவது:

சில நாட்களுக்கு முன் விளம்பர இலாகா டைரக்டருடைய அறிக்கை யொன்று பத்திரிகையில் வெளியிடப்பட்டது. சமீபத்

தில் சென்னை இந்திய வைத்திய கல்லூரியிலும் ஆஸ்பத்திரியிலும் செய்யப்பட்ட சில மாறுதல்களை நியாயமான மாறுதல்களே என்று சர்க்கார் அந்த அறிக்கையில் கூற முன் வந்துள்ளனர். அவர்களுடைய வாதம் ஊற்றுக்கு நிற்காததுடன் குறைகளை அதிகம் எடுத்துக்காட்டுவதாக அமைந்து விட்டது என்றே நான் கூறுவேன்.

இந்திய முறை போதனைக்கான நேரம்

சர்க்கார் தங்களுக்குச் சாதகமாக உஸ்மான், சோப்ரா, பண்டிட் ஆகியோர் பெயரால் தனித்தனியே நிறுவப்பட்ட கமிட்டிகளின் சிபாரிசுகளை சுட்டிக் காட்டுகிறார்கள், "போதனை முறையைத் திருத்தியமைக்கும்போது நவீன வைத்தியத்தை முன்னைவிட அதிகமாக மாணவர்கள் பயிலவேண்டும்" என்று வாதிக்கிறார்கள். இந்திய வைத்தியத்திற்கு உதவியளித்து பலப்படுத்த முயற்சிக்கையில், இந்திய வைத்தியத்திலேயே பெரும் பகுதியை நீக்கிவிடுகிறார்கள் என்பதை அறியவில்லை. இந்திய வைத்திய போதனைக்கான நேரத்தைக் குறைக்காமல் விட்டிருக்க வேண்டும். உண்மை என்னவென்றால், இந்திய வைத்திய போதனைக்கு உள்ள நேரத்தை அதிகம் குறைத்ததுமல்லாமல், பாடதிட்டத்திலிருந்து பல இந்திய வைத்திய விஷயங்களையும் நீக்கி விட்டார்கள். கல்லூரியில் சேரும் மாணவர்கள் இந்திய வைத்தியத்திலோ அவ்வைத்தியத்திற்கே ஆதாரமாக விளங்கும் தர்சனங்களிலோ சிறிதும் பரிசயம் பெற்றிராது "இண்டர் மீடியேட்" தேறியவர்கள். இவ்வித மாணவர்கள் இந்திய வைத்தியத்தில் உன்னதமான அறிவைப் பெற்று நவீன வைத்தியத்தின் பூர்ணமான சகாயத்தையும் சேர்த்துக்கொண்டு வைத்திய கைங்கரியம் செய்யும் பல முறைகளையும் பரிசீலித்து ஒரு புதிய ஸமன்வயத்தில் சமைக்கப் பெறும் வைத்திய முறையை தோற்றுவிக்கக் கூடியவர்களாக விளங்குவார்கள் என்று சர்க்கார் எப்படி எதிர்பார்க்கிறார்கள்? இப்பொழுது மாறுதல்கள் புகுத்தப்பட்டுள்ள நிலையில் இவ்வித கைங்கரியம் செய்ய வேண்டும் என்றால் ஒன்று இந்த மாணவர்கள் கல்லூரியில் சேர்வதற்கு முன்னமேயே இந்திய வைத்திய பண்டிதர்களாக இருக்கவேண்டும்: அல்லது வெட்ட

வெளியினின்றும் இந்த ஞானத்தைப் பெறும் ஆற்றல் பொருந்தியவர்களாகவாவது இருக்க வேண்டும்!

சம்ஸ்கிருதத்தின் அவச்யம்

மேலும் தர்சனங்களை கற்றறிய மிக அவசியமான பாஷையைப் புறக்கணித்தால் இந்த மாணவர்கள் தர்சனங்களை அறிந்து அவைகளை யுக்தி பூர்வமாகவும் விஞ்ஞான ரீதியிலும் ஒப்பிட்டு விளக்கம் கூறும் நிலையை எய்துவார்கள் என்று சர்க்கார் நினைப்பது மனக்கோட்டையாகவே முடியும். சம்ஸ்க்ருதத்தை விடுத்து வேறு பாஷை மூலம் இந்த தர்சனங்களைப் படிக்க முயன்றால் ஒன்று அவைகளை அறிய இயலாது போகும்; அல்லது அவைகளின் தத்துவங்களை விபரீதமாக அர்த்தம் செய்துகொள்வார்கள். அவ்வித சந்தர்ப்பத்தில் இந்த சிரத்தையுள்ள மாணவர்களுக்குச் சரியாக வழி காட்டி தர்சனப்பாதையில் ஒழுங்காகத் திருப்பிவிட வெளியிலும் யாரும் கிடைக்கமாட்டார்கள். இந்த மாறுதல்கள் இந்திய வைத்தியத்தை நவீன வைத்தியத்தின் பலத்தோடு சரியான வழியில் கிராமாந்தரங்களில் நடத்தவேண்டும் என்று கூறினால் ஜனங்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஆங்கிலத்திலேயே போதிக்கவேண்டும் என்பதற்காகக் காட்டப்படும் காரணங்களும் ஒப்புக்கொள்ளக்கூடியவையாக இல்லை. இந்த 30 வருஷ காலத்தில் கிட்டத்தட்ட 2000 எல். ஐ. எம். கள் போதனை பெற்று வெளிவந்திருக்கின்றனர்; இவ்வித போதனை முறையை ஆங்கிலத்தில்தான் வைத்துக்கொள்ளவேண்டும் என்ற அவசியம் இதுவரை ஏற்படவில்லை என்றால் இப்பொழுது என்ன அவசியம் என்பது புரியவில்லை.

பஞ்சகர்ம சிகித்ஸைப் பகுதியில் எண்ணெய் இட்டு ஒத்தடம் கொடுக்கும் சிகிச்சை அதிக செலவை உண்டாக்குவதுடன் எதிர்பார்த்த அளவு பலனையும் அளிக்கவில்லை—என்ற காரணத்தினால் மாறுதல்களை செய்ய நேர்ந்தது என்று சர்க்கார் கூறுகின்றனர். அதனாலேயே 30 நோயாளிகளுக்கு என்ற வசதியைக் குறைத்து பரீட்சார்த்தமாக கவனிக்க 4 நோயாளிகளுக்கு வசதி என்று வைத்திருக்கிறார்களாம். இவ்விதம் சர்க்காருக்கு எடுத்துரைத்த அதிகாரிகள் ஒரு பெரிய தவறு செய்துவிட்டனர். நவீன வைத்தியத்தில் தீவிர மோகம் கொண்டவர்கள்கூட சில வியாதிகளில் பஞ்சகர்ம சிகிச்சை மேம்பாடுடையது என்று ஒப்புக்கொள்கிறார்கள். ஆகையால் அவ்வித 'வியாதிகளை சிகிச்சை செய்து குணம் அளிக்க வேறு என்ன முறையை சர்க்கார் சிபாரிசு செய்கிறார்கள். ஒரு வியாதிக்கு குறிப்பிட்ட ஒரு சிகிச்

சையே பலனளிக்கும் என்றால், அதற்கெதிராகக் கூறப்படும் "செலவு அதிகம் ஆகும்" என்ற வாதத்தை ஏற்க முடியாது. தொடர்ந்து பல நபர்களுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தால், எண்ணெயிட்டு ஒத்தடம் கொடுக்கும் இந்த சிகிச்சைக்கு நபருக்கு 15 நாளைக்கு ரூ. 25க்குமேல் ஆகாது என்று நான் உறுதியாகச் சொல்லுவேன். நவீன வைத்திய ஆஸ்பத்திரிகளில் விசேஷ சிகிச்சைகளுக்கு ஆகும் செலவோடு ஒப்பிட்டால் இந்தத் தொகை ஒரு பெரிய செலவல்ல. ஜனங்களுக்குச் செய்யவேண்டிய கடமையைப் புறக்கணிப்போம் என்ற தீர்மானத்திற்கு வந்தாலொழிய இவ்வித நொண்டிச்சமாதானங்களைச் சொல்லமுடியாது

மூலிகைத் தோட்டம் பற்றி சர்க்கார் கூறும் வாதம் அலட்சியம் நிறைந்ததாக உள்ளது. அத்தோட்டம் இருக்கும் கிராமத்தில் நுழைய கல்லூரியிலிருந்து 3 மைலாவது போகவேண்டும். அறிக்கை கூறுவது போல் ஒரு மைல் இல்லை. இதைச் சிறந்த மூலிகை வனமாக்கவேண்டிய யோசனைகளை அதிகாரிகள் ஏற்கவில்லை என்றும் ஏற்றிருந்தால் செலவுக்குக் கட்டிக்கொண்டு போவதுடன் லாபத்தையும் கொடுத்திருக்குமென்றும் கூறப்படுகிறது.

வெளி இடங்களில் மருந்துகளை விலைக்கு வாங்கி விடலாம் என்ற காரணத்திற்காக மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் மருந்துசாலையை மூடிவிடலாம் என்ற யோசனை விசித்ரமானது. ஒவ்வொருவரும் தங்களுக்கு வேண்டிய மருந்துகளைத் தயாரிக்க சக்தியுள்ளவராக இருத்தல், அவசியம். மருந்து தயாரிப்பில் பயிற்சி பெறுவது இந்திய வைத்திய சிகிச்சைக்கு மிகவும் முக்கியம். சிகிச்சையை நன்கு நடைமுறையில் செய்து சேவையில் ஈடுபட இது இன்றியமையாதது.

இந்திய வைத்தியத்திற்கும் அந்த கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியேறும் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கும் சர்க்கார் உதவி செய்ய நினைத்தால் இந்த உண்மைகளை ஏற்று இந்த ஓராண்டில் அவர்கள் செய்திருக்கும் மாறுதல்களை எல்லாம் ரத்து செய்யவேண்டும். தவிர விசாரணைக் கமிஷன் ஒன்று நியமித்து அந்த கல்லூரியில் செய்த மாறுதல்களைப் பற்றி விசாரிக்கவேண்டும். அவசியம் ஏற்பட்டால் கல்லூரி ஊழியர்களை தனித்தனியாக ரகசியத்தில் சாட்சியம் கொடுக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். யோக்யர்களும், இந்திய வைத்திய முறைகளில் சிறிதும் துவேஷம் இல்லாதவர்களுமே இக்கமிஷனில் இருக்கவேண்டும்.

---

1. சுகவாழ்வு

எல்லா மனிதர்களும் எந்த வழியிலும் சுகத்தையே நாடுகிறார்கள். ஒரு காரியத்தைச் செய்தால் பலன் என்ன என்று ஆராய்ந்து இந்த விதத்தில் அனுகூலம், இந்த லாபம் என்று கூறுகிறவர்களை திருப்பி அனுகூலமோ லாபமோ என்ன பயக்கும் என்று கேட்டால், மேலும் ஒரு அனுகூலத்தையோ லாபத்தையோ பயக்கும் என்றே கூறுவர்கள். இப்படியே மேலும் மேலும் லாபத்தின் பயன் என்னவென்றே கேட்டோமேயாகில், இறுதியில் எல்லோரும் ஒரேவித பதிலையே அளிப்பார்கள். இக்காரியம் இன்பம் அளிக்கிறது என்பதே அந்த விடை. இன்பம் எதற்கோ என்றால் அதுதான் இயற்கை என்று ஒப்பி இன்பம் அல்லது சுகத்தையே எல்லோரும் நாடுகிறார்கள் என்று சித்தாந்தம் செய்வார்கள். வேதாந்திகளே தங்களுடைய ஆராய்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கையில் "எல்லோரும் இன்புற்றிருக்கவே நினைத்தேன்" என்று கூறுவதை கவனியுங்கள்.

இவ்வித சுகம் கிட்டுவது எவ்வாறு? தர்மங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவதால்தான்—என்று ஆன்றோர்கள் கூறுகிறார்கள்.

தர்மம் என்பது யாது? ஒவ்வொரு பொருளும் பிராணியும் தன்னிலையில் காப்பாற்றப்படுவதற்கும் பிறகு அழியாது வளரவும் சிற்சில குணங்களைப் பெற்று நிற்கின்றன. இந்த குணங்கள் அவைகளினின்றும் நீங்கினால் அவைகளுக்கழிவு நேரிடும். ஆகவே இந்த குணாதிசயங்களையும் அவ்வாறே அமைந்த அவைகளின் விசேஷகர்மாக்களையும் (இயங்கும் விதத்தையும்) அவைகளின் தர்மங்கள் என்போம். இந்த தர்மங்களை அறிந்து இந்த பொருளுக்கும் பிராணிக்கும் பழுது வராத வகையில் நம்முடைய காரியங்களை வகுத்துக்கொண்டால் நாம் தர்மத்தை யொட்டி ஒழுகுகிறோம் எனலாம். ஆகவே ஒவ்வொரு இனத்திற்கும் நன்மை பயப்பவை (அவைகளின் தர்மங்களுக்கு ஒத்தவை) களைக் கடைப்பிடித்தும், தீமை பயப்பவைகளை (தர்மத்திற்கு ஒவ்வாதவைகளை) நீக்கியும் நாம் வாழமுயன்றால் தர்மத்தைக் கடைப்பிடிப்பவர்கள் ஆவோம். அவ்விதவாழ்வே சுகவாழ்வு எனப்படும்.

இச் சுகவாழ்வை இடையறுது பெற்றியங்க நம் உடல் நலம் காக்கப்பட வேண்டும். உடலை யொட்டியே உணர்வு. உணர்வை யொட்டியே உகத்தல். (அனுபவித்தல்.) உகத்தலை ஒட்டியே உள்ளம் உருப்பெற்றிருப்பது. இந்த உள்ளத்தின் உருவமே உலகத்தின் உருவம் ஆகும். இந்த விச்வரூபத்தை மனம்

கிரகித்தால் உபதேசங்கள் உருவாகும். அவைகளைப் பெற்று உலகம் உய்யும். அதனால்தான் எல்லா தர்மங்களையும் காப்பாற்ற சரீரத்தைக் காப்பாற்றவேண்டும். "சரீரம் ஆத்யம் கலு தர்மஸாதனம்'' (शरीरं आद्यं खलु धर्मसाधनम्) என்று உடலையே எல்லா தர்மங்களையும் பேண முதற்கருவியாகக் கூறினர்கள்.

இவ்வுடல் நோயற்று இயங்கினல் நல்வாழ்வு வாழலாம். இந்த ஆரோக்யம் (நோயற்ற நிலை) நம்முடைய மனோவாக்காயங்களால், (உள்ளம், சொல், செயல்களால்) செய்கின்ற எந்த காரியத்தினலும் பாதிக்கக் கூடியதே. ஆகவே ஒவ்வொரு காரியமும் சுகத்தை (நன்மை) பயப்பது என்றால் செய்தும், துக்கத்தைத் (தீமையை) தருவது என்றால் தவிர்த்தும் வாழ்க்கையை நடத்த வேண்டும். அவ்விதம் பகுத்தறிந்தால், ஆரோக்யத்தைக் காப்பாற்றுபவை நம் பெரியோர்கள் ஊகித்தறிந்த தர்மங்கள் (இயற்கையின் நியதிகள்) என்று நன்கு விளங்கும்.

அவ்வாறு அறிய முயலுகையில் இரவு, பகல், பல்வேறு பருவங்கள் என்றெல்லாம் காலமாறுபாடுகளை அடையும் பொழுதெல்லாம் நம் வாழ்க்கையின் பல காரியங்களும் மாறுபட்டால் தான் சுகவாழ்வு சிதைக்கப் படாமலிருக்கும் என்று விளங்கும். எவ்வாறு காரியங்களை காலத்திற்குத் தகுந்தவாறு மாற்றி அமைத்துக் கொள்ளுவது என்பதை தினசர்யை, ராத்ரிசர்யை ருதுசர்யை என்று நம் சாஸ்திரம் விவரிக்கிறது. அவைகளை கடைப்பிடித்தால் ஆரோக்யம் காப்பாற்றப்படும்.

அடுத்தபடியாக நம் புலன்கள் மூலம் பல விஷயங்களையும் உணர்ந்து உள்ளமும் உடலும் ஊக்கப்படுகின்றன அல்லவா? இந்த புலன்கள் துய்க்கும் விஷயங்களை (சுவை, வாசனை, ஒளி, ஒலி, ஸ்பர்சம் முதலியவைகளால் கிரகிக்கப்படும் அனுபவங்கள்) இந்திரியங்களின் அர்த்தங்கள் என்பார்கள், இவ்வித அர்த்தங்கள் எத்தன்மை வாய்ந்தவையும் எந்த அளவுக்கு உட்பட்டும் மனத்திற்கும் உடலுக்கும் கோளாறு அளிக்காமல் இருக்கும் என்று தேறி, புத்தியினல் அந்த புலன்களை அடக்கி ஆரோக்ய நிலையை நீடித்துக் கொள்ளலாம்.

இவ்விதமே கர்மேந்திரியங்களாகிய வாய், கை, கால், குதம், குறிகளாலும் பல காரியங்களை நாம் புரிகிறோம். அவைகள் ஒவ்வொன்றும் மனத்திற்கும் உடலுக்கும் நன்மை பயக்கும் அளவிற்குக் கட்டுப்படுத்தப் படவேண்டும். அப்பொழுதுதான் ஆரோக்யம் காப்பாற்றப்படும்.

ஆகவே காலம், அர்த்தம், கர்மாக்கள் (கர்மேந்திரியங்களினுல் செய்யப்படும் காரியங்கள்) மூன்றையும் நன்மையைப் பயக்கும் அளவுக்கு நாம் அனுபவத்தினுல் கட்டுப் படுத்தி வாழ்க்கையை நடத்தினுல் நோயற்ற நிலை அல்லது சுகவாழ்வு கிட்டும். அதன் விளைவாக, மனம், கோபம், தாபம், பொருமை, பேராசை முதலிய கோளாறுகளால் பீடிக்கப்படாது. உடலும் சோம்பல், பலஹீனம் முதலியவைகளுக்குட்படாது இயங்கும். இந்திரியங்களும் நட்பாசைக்கு உட்படாது. உத்ஸாகமும் சுறு சுறுப்பும் போதும் என்ற த்ருப்தியும் உண்டாகும்.

தனி ஒருவர் இவ்வாறு ஆரோக்யத்தைப் பெற முயலுகையிலேயே ஜனங்களுடன் கூட்டுறவில்தான் வாழ்வதை மறக்கக் கூடாது. சுற்றி இருப்பவர்களின் ஆரோக்கியம் கெடின் தன்னுடைய ஆரோக்கியமும் பாதிக்கப்படும் என்கிறது ப்ரத்யக்ஷம். நம் எதிர்விட்டாரும் பக்கத்து வீட்டாரும் குப்பை கூளங்களை அவரவர்கள் வீட்டிற்கருகாமையில் சேரவிட்டால் அது அவர்கள் ஸ்வதந்திரம்தான். ஆனுல் அவைகளிலிருந்து வீசும் காற்று நம்முடைய ஆரோக்யத்தை சிதைக்கிறதே! இதற்கு பரிகாரம் உண்டா? உண்டு, எல்லோருக்கும் பொதுவில் நன்மை பயப்பவைகள் என்று ஒற்றுமையாகக் கூட்டுறவில் பொது சுகாதார விதிகளைக் கடைப்பிடித்தால் ஆரோக்யம் சமூகத்தில் பரவும்.

இதை தனிமனிதர் அமுலுக்குக்கொண்டுவர ஆற்றல் படைக்காத காரணத்தால் துரைத்தனத்தாரின் கடமை என்று ஒப்புவித்து அவ்வரசாங்கத்தின் கட்டுப்பாடுகளுக்கு ஒவ்வொருவரும் உட்படுவது அவசியம் என்ற வழக்கம் ஏற்பட்டது. அதையொட்டியே நம் சாஸ்திரமும் தனி மனிதனுடைய தின, ராத்திரி, ருது சர்யைகளைக் கூறியபடியே சமூகத்தில் பொதுவாக அவலம்பிக்க வேண்டிய (கடைபிடிக்க வேண்டிய) பல விதிகளையும் தர்மம் என்ற பெயரால் தொகுத்து, மீண்டும் அவைகளை நாம் ஞாபகப் படுத்திக் கொண்டு ஆரோக்யத்திற்கு அடிகோலுவோம்.

முன்பு அனுபவங்களை பெரியோர்கள் ஞாபகப்படுத்தி ஸ்ம்ருதி (ஞாபகத்தில் வந்தவை) என்று நமக்கு வழங்கினுர்கள். தத்காலம் அரசாங்கம் இந்த கைங்கர்யத்தை ஏற்றியங்குகிறது. ஆகினும் அரசாங்கத்தின் முடிவுகளையும் காரணங்களையும் ஒவ்வொருவரும் அறிந்தாலல்லவோ சரிவரகீழ்ப்படிந்து பலன் பெறலாம். இந்த அறிவைப்பரப்ப அரசாங்கம் தக்க சாதனங்களை வகுக்க முடியாது. ஒவ்வொருவரும் அக்கரையுடன் வலுவில் ஒத்துழைக்க சிறு சிறு குழுவினராகத் தங்களைத்தாங்களே

வகுத்துக் கொண்டு அந்தக் குழுவில் இந்த சுகாதாரவிதிகள் விவரிக்கப்பட்டால்தான் செயலுக்கு வர சௌகரியம் பெருகும்.

அவ்வாறு இயற்கையிலேயே ஒன்றுசேர வாய்ப்பு பெற்றவர்கள் வைத்யர், நோயாளி, சிச்ரூஷை செய்பவர்கள், ஔடதம் சேகரித்து அளிப்பவர்கள் என்ற தொகுப்பினரே என்று ஆயுர்வேதம் காட்டிய பாதையில் கூட்டுறவு பலப்பட அப்யுதயகேந்திரங்கள் பயன்படும். ஆரோக்யத்தைக் காக்க இன்றியமையாத தர்ம ப்ரசாரம் இந்த கேந்திரங்களின் முக்கிய சேவையாகும்.

வைத்தியர்கள் முன்வந்து அப்யுதயகேந்திரங்களை அமைக்க தயங்கும் பக்ஷத்தில் அவர்களிடம் கூடிப்பழகும் மற்ற தொகுப்பினர்கள் வைத்தியர்களை ஊக்கி கேந்திரம் அமைக்கச் செய்வது முதல் பணியாகும். பொதுக்காரியத்தில் அக்ரதாம்பூலம் யாருக்கு என்ற விவாதத்தை அறவே அடக்கி ஒவ்வொருவரும் சத்சங்கத்தை அமைக்க முயலவேண்டும். முயற்சி திருவினையாக்கும்.

இக் கேந்திரங்களில் அடிக்கடி ஆரோக்ய விஷயங்களை விவரிக்க உதவும் என்ற நம்பிக்கையுடன் ஆயுர்வேத மண்டலம் ‘ஆரோக்யாம்ருதம்’ என்ற வெளியீடுகளை அளிக்க முன்வந்துள்ளது போற்றத் தக்க விஷயம். இந்த விவரணம் அந்த கைங்கர்யத்தைத் துவக்கி வைக்கிறது.

இவ்விதம் சுகவாழ்வை அமைக்க முயன்றால் சகிப்புத் தன்மையும் நிம்மதியும் ஜனங்களிடையே தோன்றும். இந்த சாந்தியை (அமைதியை) சமூகத்தை என்றென்றும் வாழவைக்கும் அம்ருதம் என்றே போற்றுவோம். அதைக்குறிக்கும் வகையிலேயே அம்ருதத்தையே சாந்தி என்று சாஸ்திரம் விவரித்துள்ளது. அதை மனத்தில் கொண்டே சுகவாழ்வு மூலம் சாந்தியை எய்தலாம் என்று போதிக்கும் சூசகமாக ஆரோக்யாம்ருதம் என்று இப்பிரசுரங்கள் அமைக்கப் படுகின்றன. இதற்குக் காரணமான தர்மங்களை படிப்படியாக விவரித்து அப்யுதயகேந்திரங்கள் மூலம் பிரசாரத்திற்குக் கொண்டுவருவோம்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். அனைவரும் இன்புற்றிருக்கவே அப்யுதயகேந்திரங்கள் மூலம் சமூகத்தில் சாந்தியைப் பரப்ப உழைத்திடுவோம் வாரீர்.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:.

த. வி. ராதாகிருஷ்ண சாஸ்த்ரீ.

KALIA BROTHERS

(REGD.)

MUSK & INDIAN DRUG MERCHANTS, JULLUNDUR CITY, PUNJAB.

For Pure Musk, Saffron, Shilajit, Gorochanam, Real Pearls, Vamsa lochan, Ashtavargam, Pachakarpuram, Gold & Silver Leaves, Athivisha & All kinds of Himalayan Herbs and Drugs.

Price list & Catalogue Free on application.

We were awarded a Gold Medal Certificate for

MUSK & SAFFRON

by 39th All India Ayurvedic Congress,

KOTTAKKAL, MALABAR.

கலியா பிரதர்ஸ்

(ரிஜிஸ்டர்டு)

கஸ்தூரி, இந்தியமருந்து சரக்கு வியாபாரிகள்,
ஜலந்தர்ஸிடி, பஞ்சாப். (இந்தியா)

சுத்தமான உயர்ந்த ரக கஸ்தூரி, குங்குமப்பூ, ஷிலாஜத், கோரோசனம், நல்முத்து, வம்சலோசனம் (மூங்கிலுப்பு), அஷ்டவர்கம், பச்சைக்கர்பூரம், தங்க வெள்ளி இலைகள், அதிவிடயம் மற்றும் நல்ல ஹிமாலய மருந்துச் சரக்குகள் எம்மிடம் கிடைக்கும்.

எங்கள் கஸ்தூரியும் குங்குமப்பூவும்
39-வது அகில இந்திய ஆயுர்வேத மஹாஸம்மேளனத்தில்
(கோட்டக்கல், மலபார்.)
தங்கமெடல் அத்தாக்ஷிப்பத்திரம் பெற்றவை.

கேட்லாக் விலை விபரத்திற்கு எழுதவும்.

KALIA BROS, *Musk Merchants,*
JULLUNDER CITY. (Punjab.)